# ஆய்வுச் சுருக்கம்
# Abstract of the Dissertation

இலங்கை உட்பட வளர்முக நாடுகளில் மட்டுமின்றி வளர்ச்சி அடைந்த நாடுகளிலும்கூட நகரப்புற, கிராமப்புற வேறுபாடுகள் இன்றிய முறையில் ஆசிரியர் வரவின்மைகள் உயர் வீதத்தில் காணப்படுவது நாடுகளின் பொதுக்கல்வி வழங்கலில் பாரிய பிரச்சினையொன்றாக இனங்காணப்பட்டுள்ளது. ஆசிரியர் வரவின்மைகள் தொடர்பாக இலங்கையிலும் கடந்த சில தசாப்தங்களில் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வுகளும் இலங்கைக் கல்வி அமைச்சினது புள்ளி விபரங்களும் ஆசிரியர் வரவின்மைகள் உயர்வாகக் காணப்படுவதைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வகையில், பாடசாலைகளில், கற்றல் செயன்முறைகளின் தீர்க்கமான கட்டத்திலிருக்கும் மாணவர்களைக் கொண்ட க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்களது வரவின்மைகளுடன் தொடர்புடைய முக்கியமான காரணிகளை இனங்கண்டு அவ்வாசிரியர்களது வரவுகளை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை முன்வைக்கும் நோக்கமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. காலவரையறைகள் மற்றும் நாட்டின் நடைமுறை நிலவரங்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஆய்வைச் சாத்தியமாக்கும் வகையில் ஆய்வுப் பிரதேசமாக கொழும்பு தெற்கு வலயம் தெரிவு செய்யப்பட்டது.

முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு கருதுகோள்களின் அடிப்படையில் ஆசிரியர் வரவின்மைகளில் தாக்கஞ் செலுத்தும் காரணிகள் மூன்று வகுதிகளாக இனங்காணப்பட்டன. அவை ஆசிரியர் தொடர்பான காரணிகள், பாடசாலை தொடர்பான காரணிகள், சமுதாயம் தொடர்பான காரணிகள் எனக் குறிப்பிடப்பட்டன. ஆசிரியர் தொடர்பான காரணிகளில் பதினைந்து மாறிகளும் பாடசாலை தொடர்பான காரணிகளில் நான்கு மாறிகளும் சமுதாயம் தொடர்பான காரணிகளில் ஐந்து மாறிகளும் உள்ளடக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுக்குரிய தரவுகளைச் சேகரிப்பதற்கு ஆசிரியர்கள், அதிபர்கள், உப அதிபர்கள், மாணவர்களுக்கான வினாக்கொத்துக்களும் நேர்காணல் அட்டவணைகளும் அவதானிப்பு

அட்டவணைகளும் ஆய்வு கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. இவை முன்னைய ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்ட ஆய்வுகருவிகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வினது இலக்கிற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டு முற்பரிசோதனை மூலமும் விரிவுரையாளர்களின் ஆலோசனைகள் மூலமும் மறுசீரமைக்கப்பட்டன. கொழும்பு தெற்கு வலயத்திலுள்ள எட்டு தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் ஐந்து பாடசாலைகளில் மட்டுமே க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் காணப்பட்டன. வேறுபட்ட தரங்களையும் (தேசிய, 1AB, 1C) ஆண்கள், பெண்கள், கலவன் பாடசாலைகளாக உள்ளடங்கும் வகையிலும் படையாக்க மாதிரிகளாக நான்கு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றிலிருந்து எழுமாற்றாக க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் விஞ்ஞான, வர்த்தக, கலைப் பிரிவைச் சேர்ந்த நாற்பது ஆசிரியர்களும் அவ் வகுப்புக்களில் கற்கின்ற நாற்பத்தி நான்கு மாணவர்களும் (அவர்களது விகிதாசாரங்களைப் பேணும் வகையில்) மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் நான்கு உப அதிபர்கள் மற்றும் நான்கு அதிபர்களும் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (மாதிரிகள் தெரிவின்போது ஆண், பெண் விகிதாசாரமும் கருத்தில் கொள்ளப்பட்டது.) சேகரிக்கப்பட்ட தரவுகள் புள்ளி விபரவியல் பகுப்பாய்வு நுட்பங்கள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுத் தேவையான சராசரிகள், சதவீதங்கள், வரைபுகள் தயாரிக்கப்பட்டன. அளவுசாரா விடயங்கள் பண்பு ரீதியான பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இவ்வாய்வு ஆசிரியர் வரவின்மைகளுக்கும் ஆசிரியர் தொடர்பான காரணிகள், பாடசாலை தொடர்பான காரணிகள் மற்றும் சமுதாயம் தொடர்பான காரணிகளுக்கும் நெருக்கமான தொடர்புகளுள்ளன எனும் முடிவையே வெளிப்படுத்துகின்றது. ஆசிரியர் தொடர்பான காரணிகளில் அவர்களது வரவின்மைகளுடன் அதிகம் தொடர்புடைய ஏழு காரணிகள் இனங்காணப்பட்டதுடன் பாடசாலைக் காரணிகளில் ஆசிரியர் வரவின்மைகளுடன் அதிகம் தொடர்புபடும் நான்கு காரணிகளும் இனங்காணப்பட்டன. அத்துடன் சமுதாயக் காரணிகளில் ஆசிரியர் வரவின்மை களுடன் அதிகம் தொடர்புபடும் நான்கு காரணிகள் இனங்காணப்பட்டன. ஆசிரியர் வரவின்மைகளின்போது பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் பரிகார வேலைகள் அதிகளவிற்கு வெற்றிகரமானவையாகக் காணப்படவில்லை என்பதையும் ஆசிரியர்களது வரவின்மைகள் மாணவர்களது கற்றல் செயற்பாடுகளிலும் பாடசாலை முகாமைத்துவதிலும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதும் ஆய்வின் முடிவுகளாக உள்ளன. ஆசிரியர் வரவின்மைகளுக்கான காரணங்கள் குறைந்து செல்வதற்குப் பதிலாக கூடிச் செல்கின்றன என்பதையும் ஆய்வுத் தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன.